*(அம்பா மாலையை எடுத்துக்கொண்டு வருகிறாள். அப்பொழுது, கர்ஜிக்கும் குரலில்)*

பீஷ்மர் : நிறுத்துங்கள் சுயம்வரத்தை!

காசிராஜன்: பீஷ்மரே... எதற்காக? பிரம்மச்சாரியான நீர், இந்தச் சுயம்வரத்திற்கு வரவேண்டிய அவசியம் என்ன வந்தது?

பீஷ்மர் : என்னுடைய தம்பி விசித்திர வீரியனுக்காக இந்த மூன்று கன்னியரையும் பலவந்தமாகத் தூக்கிச் செல்லப் போகிறேன். என்னைத் தடுக்கும் ஆற்றலுடைய ஆண்மகன் எவனாவது இருந்தால், என்னை வென்று அந்தக் கன்னியரைக் கூட்டிச் செல்லட்டும்.

காசிராஜன் : பீஷ்மரே! என்ன இது விபரீதம்! உங்களை வெல்ல யாரிருக்கிறார்கள் இங்கே?

சால்வா : நானிருக்கிறேன். கண்ணோடு கண்நோக்கிக் காதலை என் உள்ளத்தில் விதைத்த அம்பாவை அடைவதற்காக இந்தச் சவாலை நான் எதிர்கொள்கிறேன்.

அம்பா : அய்யா, இது என் சுயம்வரம்! நான் விவாகம் செய்ய விரும்புகிற மணவாளரைத் தேர்ந்தெடுக்கிற உரிமை இந்தச் சுயம்வரத்தில் எனக்கு மட்டுமே உண்டு.

பீஷ்மர் : பெண்ணே! நீ சிறுகுழந்தை. நம்முடைய மண உரிமை முறைகளை நீ அறிந்திருக்க மாட்டாய். நம்முடைய மறைநூல்கள் சொல்லியிருக்கிற எண் வகை விவாக முறைகளில் பலவந்தமாகத் தூக்கிச் சென்று மணமுடிக்கிற இது, ராக்கதர் முறை. காசி மகராஜனே, என்ன சொல்கிறீர்?

*(காசி மகராஜா தலைகுனிந்து அமர்தல். அரங்கு சண்டையிடும் களமாகிறது.)*

பாடல் : அண்ட கண்டமும் கிடுகிடுங்க
ஆட்படை தேர்ப்படை நடுநடுங்க
மோதல் நடந்தது.. பீஷ்மர் சால்வா மோதல் நடந்தது...



காசிராஜனும் தலைகுனிய... அம்பையும் அங்கே பதைபதைக்க,

பீஷ்மர் சால்வா மோதல் நடந்தது... பீஷ்மர் சால்வா மோதல் நடந்தது...

*(பீஷ்மருடன் சால்வா சண்டையிடுதல். சால்வா தோற்றுக் கீழே விழுதல். அம்பா, பீஷ்மரைத் தடுத்து, அவரின் காலில் விழுந்து முந்தானைப் பிச்சை கேட்கிறார்.)*

அம்பா : பிதாமகரே!... என்னை மன்னியுங்கள். ஏற்கெனவே நானும் இவரும் மனதால் இணைந்துவிட்டோம். நீங்கள் மனமிரங்கி எங்கள் இருவரையும் சேர்த்து வைக்க உதவ வேண்டும்.

பீஷ்மர் : பெண்ணே! உன் உள்ள உறுதியைக் கண்டு மகிழ்கிறேன். சால்வாவை மணாளனாக உள்ளத்தில் வரித்துக்கொண்ட உன்னால், என் தம்பி விசித்திர வீரியன் ஒருக்காலும் மகிழ்ச்சி பெறமுடியாது. உன் தங்கைகள் இருவரும் என்னோடு வரட்டும்... நீ உன் விருப்பப்படி சால்வாவை மணம் முடித்து மகிழ்ச்சியாக வாழ்!

அம்பா : பிதாமகரே!.... என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லையே.... இதென்ன... கனவா... நனவா... என் வாழ்நாளில் உங்களை என்றும் மறக்க மாட்டேன்!

பீஷ்மர் : நல்லது அம்பா! இன்னொரு வாழ்நாளிலும் கூட, என்னை நீ மறக்கவே மாட்டாய்!...

அம்பா : இன்னொரு வாழ்நாளா?... என்ன சொல்கிறீர்கள்?

பீஷ்மர் : ஏழேழு ஜென்மத்திற்கும் என்கிறேன். சரி, அதிருக் கட்டும் பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ உன்னை ஆசீர்வதிக்கிறேன்... சால்வா! உனக்குரிய பொருளை நீயே எடுத்துச்செல்!

*(சால்வா அதிர்ச்சியடைந்து பார்த்துக் கொண்டிருத்தல். அம்பா எழுந்து வந்து மகிழ்வுடன் சால்வாவை*

*எழுப்பத் தன் கையைத் தருகிறாள். சால்வா அதை நிராகரிக்கிறான். அம்பா அதிர்ச்சி அடைகிறாள்.)*

அம்பா : என் மனதிற்குகந்த மணாளரே!... உங்களுக்கு என்னானது? உங்களுக்காக பீஷ்மரிடம் நான் முந்தானைப் பிச்சைக் கேட்டது தவறா?

சால்வா : உன் விருப்பத்தைத் தவறென்று சொல்ல நான் யார்... ஆனால் நான் சத்திரியன்... சண்டையில் வெற்றி பெற்றிருந்தால் மட்டுமே உன்னைக் கைபிடிக்கும் உரிமை எனக்குண்டு. தோற்றுப் போன பொருளைப் பிச்சையாகப் பெற்றுக்கொள்ளும் மனத்திடம் எனக்கில்லை. என்னை மன்னித்துவிடு!

அம்பா : நீலவிதானத்து நித்திலப் பந்தலின் கீழ், கோலமயிலே, கொஞ்சும் கிளியே, கோமேதகமே என்றெல்லாம் என்னைப் பாராட்டி, என் கையைப் பிடித்த நீங்களா சொல்கிறீர்கள், என் கைபிடிக்கும் உரிமையை இழந்துவிட்டேன் என்று!

சால்வா : தோற்றவன்...பேசுவதற்கான உரிமையை இழந்தவன். இனி நீ பீஷ்மரின் பொருள்! அதைப் பிச்சையாகப் பெற்றுக் கொள்வது சத்திரிய தர்மம் அல்ல.

அம்பா : நான் பொருளா... உங்களின் உயிரில்லையா?

சால்வா : ஓர் அடிமை, இன்னொரு அடிமையை நேசிக்கவே முடியாது... என்னை மன்னித்துவிடு!

அம்பா : பிதாமகரே! பார்த்தீர்கள்தானே நீங்களும்! எனக்கொரு வழியைச் சொல்லுங்கள்!

பீஷ்மர் : நானா... நான் பிரமச்சாரி... உன்னை மணந்து கொள்ள என்னால் முடியாது. இன்னும் கொஞ்ச நேரம் உன்னுடன் பேசிக்கொண்டிருந்தால் அது என் பிரமச்சரியத்திற்கு இழுக்காகிவிடும்.. என்னையும் மன்னித்துவிடு!

அம்பா : அப்பா..என்னப்பா இது விசித்திரம்? இந்தச் சுயம் வரத்தில் என் விருப்பம் எங்கேயப்பா இருக்கிறது?



காசிராஜன்: பெண்ணாய்ப் பிறந்ததன் சாபம் இது! எ
கூட நீ மன்னித்து விடு!

அம்பா : மன்னித்து விடு... என்னையும் மன்னித்
என்னையுங்கூட மன்னித்துவிடு!

மனுஷியாக என்னை மதிக்காத உங்களை
மன்னிக்க மட்டும், இந்த அடிமைக்கு உரி
கொடுத்திருக்கிறீர்களா?... இதையெல்லாம்
கேட்கும் ஒரு காலம் நிச்சயம் வரும்... அப்
அவர்கள் உங்களைக் கூண்டிலேற்றுவா
சுயம்வரம் பெண்ணிற்கான சுதந்திரம் எ
எண்ணி இருந்தேன். ஆணாதிக்கச் சமூகத்தி
அவர்களின் பராக்கிரமத்திற்கான அடை
என்பதாக மாற்றிவிட்டீர்கள்... என்னுடைய வ
என்னால் தீர்மானிக்க முடியவில்லை.
ஆடவர்களின் கைவிரிப்பில்தான் அது
கொண்டிருக்கிறது... இன்று நான் ஏ
போயிருக்கலாம். மீண்டும் இன்னொரு பூகம்
நான் திரும்பி வருவேன்...

*(ரௌத்திரம் கொழுந்துவிட்டு எரிய, ரௌ
தாண்டவம் ஆடுகிறாள் அம்பா!)*

பெற்ற பெண்ணை 'அம்போ' என விட்டுவிட்ட
உறையில் எதற்கு இந்த வாள்!... காதலித்த
'அம்போ' எனக் கைவிட்ட அடிமைக்கு அழகு செ
இந்த உறைவாள்!... பிதாமகரே! பெண்
வாழ்வைக் கூறு போடவா உங்களிடம்
உடைவாள்!......

*(மூன்று வாட்களையும் அம்பா கையி
ஆவேசமாக ஆடுகிறாள். அதன் முடிவில்
வாட்களையும் ஒருசேரக் கையிலேந்தி, தன்
குத்திச் சரிகிறாள்.)*

இழந்த இந்தக் கணக்கை நேர்செய்ய நான் மீண்டும் வருவேன்... மீண்டும் வருவேன்...

*(அலறிச் சரிந்து திலத்தில் விழுகிறாள். ஆடவர் மூவரும், குற்றவாளிகளாய் மூன்று பக்கமாய்த் தலைகுனிந்து நிற்கின்றனர். அவர்களின் ஊடே கட்டியக்காரன் வருகிறான்.)*

கட்டியக் காரன் : நடிகர்களுக்கெல்லாம் இல்லாத சுதந்திரம், நாடகத்துலெ கட்டியக்காரனுக்கு இருக்கு... நான் சொல்றேன்... இது மாதிரி ஆம்பளைங்களா நீங்க இருக்காதீங்க... எதையும் கேள்வி கேக்குற மனுஷங்களா நீங்க இருக்கணும். 'எவருடைய கருத்தையும் மறுப்பதற்கு எவருக்கும் உரிமை உண்டு; அதைவெளியிடக் கூடாது என்று சொல்கிற உரிமை எவருக்கும் இல்லை'ன்னு சொன்ன பெரியார், பெண்ணியம் பத்தி 1930கள்லேயே சொல்லி யிருக்றதெ இப்பப் படிச்சாலும் புதுசாத்தான் இருக்குது... நீங்களும் அதைக் கொஞ்சம் கேளுங்க...

நபர் 1 : 'எந்த நிர்ப்பந்தமானாலும், எந்தக் கட்டுப் பாடானாலும், எந்தத் தருமமானாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருவருக்கும் சமமாக இருப்பதானால் அதைப் பற்றி நமக்குக் கவலை இல்லை... அப்படிக் கில்லாமல், எவரொருவர் ஆதிக்கத்தையும் வலியுறுத்துகிற எதனோடும் நமக்குச் சம்மதமில்லை.... அதனால் நமக்குப் பலனில்லை.

நபர் 2 : இந்துமத சாஸ்திரம், தர்மம், புராண இதிகாசம், நீதிக் கதைகள் எனும் அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு யார் எங்கு போய்ப் பெண்கள் சுதந்திரம் பேசினாலும், அது கட்டுப்பாடுள்ள ஆணடிமைப் பிரகாரமாகத்தான் முடியுமே தவிர, அது சிறிதும் விடுதலையை உண்டாக்காது.

நபர் 3 : பெண்களைப் படிக்க வைக்க வேண்டுமென்று சொல்லி, எழுத்து வாசனையுண்டாக்கி, அவர்கட்கு



அரிச்சந்திர புராணத்தையும், நளாயினி கதையையும், இராமாயணத்தையும், பாரதத்தையும் படிக்க வைத்தால், பின்னும் அதிகமாக அடிமைகள் ஆவார்களா சுதந்திரம் அடைவார்களா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்...'

கட்டியக் காரன் : இதுக்கு நம்மகிட்டெ உடனடியா பதிலில்ல. ஆனா அதுக்கான பணி இருக்கு. நாம எல்லாத்தையும் படிப்போம்.. அதெல்லாம் நடைமுறை வாழ்க்கைக்குச் சரியா என்று அறிவியல் பூர்வமாக் கேள்விகளை எழுப்புவோம். 'அம்பா' கதையும், புதுவாசிப்புலெ, பொண்ணெ 'அம்போ'ன்னு விட்டெதெப் பத்தினக் கேள்வியெத்தான் நமக்குள்ள எழுப்புது. அந்தக் கேள்வியோடவே நாடகத்துக்கு 'இப்ப மங்களம் பாடலாமா?........

நடிகர்கள் : மங்களம் எப்படிப் பாடுறது?

கட்டியக் காரன் : இந்த நாடகத்துக்கான சுப மங்களம், பாரதியின் பெண்கள் விடுதலைக் கும்மியாய் இருக்கட்டும்!

*(அனைவரும் 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்/ எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி' என்பதைப் பாடி வணங்குகின்றனர்.)*

★

## வி. சக்தி புராணம் என்கிற வியாபாரமாயணம்

**விதூஷகன் 1:**

வந்தருள்வாய் கணநாதா!- வளம்பெறவே
வரந்தருவாய் குணசீலா!-அய்யா!
நல்லமழை பெய்ய வேணும்...
நாடெல்லாம் செழிக்க வேணும்...
செல்லமழை பெய்ய வேணும்...
செகமெல்லாம் செழிக்க வேணும்...
நாடகம் பார்க்க வந்திருக்கும் சபையோரே!-எங்கள்
மனம் நிறைந்த சுவையோரே!
கணபதிஅருளினாலே... எங்கடா போச்சு சாமி? சாமி... சாமி... புள்ளையார்சாமி...

**விதூஷகன் 2:**

நாடெல்லாம் காடாகித்தான் போச்சி!-அய்யா
காடெல்லாம் காய்ஞ்சிப் போகலாச்சி!
சொல்லெல்லாம் செல்லரித்துப் போச்சி!- உடம்பின்
செல்லெல்லாம் செத்துப் போகலாச்சி!
செல்போனா வாழ்க்கை அமஞ்சிப் போச்சி!-ஜெகபதி
கணபதிக்கே கனெக்ஷன் இப்பக் கட்டாகித்தான் போச்சி!
எப்போ இங்கே வரப் போறார்?- கணபதி



வந்து என்ன வரம் தரப் போறார்?

வி.1 : ஏய்! இதெல்லாம் உன் 'வேலை'யா

வி.2 : 'என்' வேலை இல்லெ! எல்லாம் ... தான்! திருடி வச்சாதான் புள்ளை... வரும்னு, திருட்டுக்குப் புள்ளையார் ... குடுத்தது யாரு வேலெ?... ஒன் வேலை... ஓம் புள்ளையார் வேலையா?

வி.1 : பாத்தியா... நாந்தி பாடுற கேப்புலெ... ஒட்றான்.. கவனமாயிருக்கணும்... வம்பு... இவனுங்க வாலாட்டுறதே எங்க புள்... தான்... ஏய்... ஆத்திகத்தைச் சீண்டிப் பாக்...

வி.2 : சீண்டிப் பாக்கலெ. தோண்டிப் பாக்குறே...

வி.1 : என்னது தோண்டிப் பாக்கியா?

வி.2 : ஆத்திகங்றது கண்ணை மூடிட்டு ... அப்படியே நம்புறது... ஆனா நாத்திகங்றது...

வி.1 : கண்ணைத் தொறந்துட்டு அதுமேல... கேள்விகளா எழுப்புறது! ....

வி.2 : ஆத்திகமோ நாத்திகமோ... திரிச்சாதான் அ...

வி.1 : சாமியோ பூமியோ.... மரிச்சாதான் அது ...

வி.2 : செரச்சாதான் அது மசுரு...

வி.1 : வெரச்சாதான் அது குளிரு...

வி.2 : கட்னாத்தான் அவ மாமி!...

வி.1 : நம்புனாத்தான் அது சாமி.

வி.2 : நம்பாதவனுக்கு அது வெறும் அம்மிதான்!

வி.1 : அம்மியோ டம்மியோ... சாமிங்றது ஒரு ... நாடகத்லெ புள்ளையார்சாமி வணக்கம்... ஐதீகம்.. அதுதான் எனக்கு வேதம்!...

வி.2 : வேதமோ விவேகமோ? 'சும்மா'க் கெடக்குதே திண்டுன்னு.... நாந்தான் இதுமேலக் குந்தியிருந்தேன் கம்முன்னு... நீயும் வந்த அவசரத்துலெ கண்ணை மூடிட்டு என்னையப் புள்ளையாராக் கும்புட்டுட்டு நாடகத்தெத் தொடங்கிட்டே!

வி.1 : நீயா குந்தியிருந்தே!... புள்ளையாராவா?.. அய்யய்யோ... நாத்திகப் புள்ளையாரக் கும்பிட்டா நான் நாந்தி பாடுனேன்!.... இந்தப் பாவத்தெ நான் எங்கெ போய்க் கழுவ?....

வி.2 : எங்கெயாவது போய்க் கழுவு. அதுக்கு ஏன் அழுவுறே?

வி.1 : கருப்புச் சட்டையிலெ நீ இருக்கும்போதே எனக்குச் சின்னதா ஒரு சந்தேகம் வந்திச்சி...

வி.2 : கருப்புக் கண்ணாடி போட்டுப் பாத்தா பாக்குற தெல்லாம் கருப்பாத்தான் தெரியும்... இப்பவும் ஒண்ணும் குடிமுழுகிப் போயிடலை... கிரிக்கெட் புள்ளையாரு... ஃபுட்பால் புள்ளையாரு மாதிரி... என்னையக் கருப்புச் சட்டப் புள்ளையாரா நெனச்சி நாடகத்தெத் தொடங்கு.

வி.1 : சாமி சரணம்!... கருப்புன்னாலே எனக்கு வெறுப்புதான் வருது...

வி.2 : சரி....கருப்புச் சட்டைக்காரன் வேண்டான்னா கூட்டத்துலயிருந்து ஒரு செகப்புச் சட்டைக்காரனைப் புடிச்சிப் புள்ளையாரா ஒக்கார வச்சிக் கதையை நடத்து!

வி.1 : செகப்புச் சட்டையா? அது இன்னுமே டேஞ்சராச்சே!

வி.2 : செகப்பு இல்லேன்னா மஞ்சள்!

வி.1 : அய்யா! ஆபத்தெ வெல குடுத்து வாங்கச் சொல்றியா?

வி.2 : மஞ்சள் இல்லேன்னா பச்சை....

வி.1 : அம்மா...டி!... சொந்தக் காசுலெயே எவனாவது சூனியம் வச்சிக்கிருவானா?



வி.2 : அப்ப... பச்சையும் இல்லேன்னா... காவி...

வி.1 : அய்யா... வேண்டாமய்யா சாமி.... ஆளெவுடு!

வி.2 : என்னென்னமோ கலருங்க இங்கே இருக்குதே! கண்ணுக்குக் குளிர்ச்சியான கலராப் பாத்து யாரையாவது கூப்பிடு....

வி.1 : எதுக்கு?... இங்கெயென்ன இலவசமாக் குடுக்கப் போறோம்!... இயற்கெதான் எனக்குப் புடிச்ச கலரு!..... யாரை நம்பி நான் பொறந்தேன் போங்கடா போங்க... என் கருத்து வெல்லும், வென்ற பின்னே வாங்கடா வாங்க....

வி.2 : ஏய்! என்ன ஆச்சு ஒனக்கு?

வி.1 : அவசரத்துக்கு நானே புள்ளையாரா இருந்துக்கிறேன்... ம்ம்ம்.... நீ கதையை ஆரம்பி!.

வி.2 : அய்யா சாமி! இந்த ஆசாமிக்கு ஒங்ககிட்ட ஒரு கேள்வியிருக்குது. ஒண்ணு மனுஷனா இருக்கணும், இல்லை யானையா இருக்கணும். இதென்ன பாதி யான; மீதி மனுஷன்னு!......

வி.1 : அது ஒரு சமூகத்தின் கற்பனை!

வி.2 : அப்படிக் கொழந்தை பொறந்தா யாராச்சும் ஒப்புத்துக்குவாங்களா?

வி.1 : அழுகிப்போகும் நாக்கு... அந்தக் கற்பனைதான் அழகு! அதுதான் சாமி!

வி.2 : கற்பனை அழகுதான், அது பொய் அழகு!

வி.1 : கவிதைக்குப் பொய் அழகு!....கண்ணுக்கு மை அழகு!

வி.2 : அறிவுதான் உண்மையிலேயே அழகு.

வி.1 : உண்மையில என்ன அழகு இருக்கு? கற்பனைங்றது புனைவு! புனைவுதான் அழகு!

வி.2 : உண்மைதான் அழகு!

வி.1 : புனைவுதான் அழகு!

வி.2 : இல்லெ... உண்மெதான் அழகு!

வி.1 : உண்மைங்றது அம்மணம். அம்மணங்றது அசிங்கம். புனைவுதான் அதுக்கு ஆடை கட்டி அழகாக்குறது. புனைவுதான் அழகு! கலைகள் எல்லாம் புனைவு! பத்துத்தலை ராவணன் சீதையைக் கடத்திக்கிட்டுப் போனது புனைவு!.... அனுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கிட்டுப் பறந்தது புனைவு!..... கண்ணகி. தன் முலையினாலெ மதுரையை எரிச்சதுங்றது புனைவு!... இதெல்லாந்தான் அழகு... இப்பச் சொல்லு... உண்மையா புனைவா எது அழகு? உன் மனசெத் தொட்டுச் சொல்லு...

வி.2 : உண்மையில்லாம புனைவு இல்லை. உண்மைங்றது உள்ளது; பத்துங்ற உண்மையும் தலைங்ற உண்மையும் இல்லாமெ பத்துத்தலைங்ற புனைவு கிடையவே கிடையாது... புனைவுங்றது உண்மையோட அவுங்க வுங்க மனசு சேர்றது. ஒரே உண்மை நீ சொன்னா உன் புனைவு! அவன் சொன்னா அவன் புனைவு!... நான் சொன்னா என் புனைவு!

வி.1 : புனைவுகளின் கைபிடிச்சி அப்படியே தொடர்ந்து போனா...

வி.2 : தொடர்ந்து போனா... உண்மை, காக்கா காக்காவா வாந்தியெடுத்த வதந்தியாயிரும்... உண்மைதான் அழகு...

வி1 : புனைவுதான் அழகு....

வி.2 : உண்மைதான்...

வி.1 : புனைவுதான்...

வி.2 : உண்மை...

வி.1 : புனைவு..



வி.2 : (பார்வையாளரிடம்) ஏங்க நீங்களே சொ... உண்மைதானே அழகு?

வி.1 : நீங்களே சொல்லுங்க... புனைவுதானே அ...

வி.2 : நீங்க சொல்லுங்க... உண்மையா புனைவா எ...

வி.1 : இங்க பாரு... நீ உண்மையெ நம்புறெ... உண்மைதான் அழகு...

வி.2 : இங்க பாரு... நீ புனைவை நம்புறெ... புனைவுதான் அழகு...

வி1 : நம்மச் சண்டையப் பாக்குறதுக்கு இவுங்க... வரலெ. நாடகம் பாக்ற நம்பிக்கையோட... காங்க.. நம்ம சண்டையெப் பெறவு வச்சிக்க...

வி.2 : ம்ம்ம்.... அதுவுஞ்... சரிதான்!

வி.1 : கைகேயி கேட்ட வரத்துனாலெ...

வி.2 : இராமாயணம் உருவாச்சி... இப்ப இ... கூடியிருக்குற மக்கள மதிச்சி...

வி.1 : நாடகமாயணம் ஒண்ணை உருவாக்குவோம்...

வி.2 : நாடகமாயணம்...

வி.1 : நாடகமாயணம்...

வி.2 : நாடகமாயணம்...

வி.1 : நாடகமாயணம்...

வி.2 : நாடகமாயணமோ இராமாயணமோ.. வெந்தா... அது...

வி.1 : சோறு... வௌஞ்சாத்தான் அது...

வி.2 : பயிரு... வெட்டியாப்போனாதான் அது...

வி.1 : பதரு... நெறஞ்சாத்தான் அது..

வி.2 : குதிரு...நெளிஞ்சாத்தான் அது...

வி.1 : போதும் சமரு!... நீ சும்மா அமரு!....

வி.1வி.2 : நாடகமாயணம்... நாடகமாயணம்...

வி.2 : கலக்கலா ஒண்ணு வந்திச்சி... எகனைக்கு மொகனையா நீ பண்ணுனதுல அது சொல்லாமக் கொள்ளாமப் போயிடுச்சி... போனாப் போகட்டும்..

வி.1 : போனால் போகட்டும் போடா...

வி1-வி.2 : இந்தப் பூமியில் நிலையாய் வாழ்ந்தவன் யாரடா?... போனால் போகட்டும் போடா...

வி.1 : வந்தது தெரியும் போவது எங்கே... வாழ்க்கை நமக்கே தெரியாது..

வி.2 : வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் இந்த மண்ணில் நமக்கேன் இடமேது? வாழ்க்கை என்பது வியாபாரம்...

வி.1 : வரும் ஜனனம் என்பது வரவாகும்...

வி.2 : அதில் மரணம் என்பது செலவாகும்....

வி.1 : தம்பீ! வரவு செலவுக் கணக்கெ வச்சி வாழ்க்கையெ என்னாத் தத்துவமாப் பாத்திருக்குறாரு கவிஞரு!

வி.2 : வாழ்க்கையையே அவரு வியாபாரமாப் பாத்திருக்காரு!...

வி.1 : எனக்கொரு ஐடியா... வியாபாரம் பத்தி நாடகம் போட்டா என்ன?

வி.2 : வியாபாரம் பத்தியா?......வியாபாரம்னா.... ஒரு கம்பெனி வேணும்...

வி.1 : இந்தா இருக்கு கம்பெனி...

வி.2 : பொருளை உற்பத்தி பண்ணணும்..

வி.1 : இந்தா... பொருளெ உற்பத்தி பண்ணு...

வி.2 : அதைச் சந்தைப்படுத்துற தொழில் நுணுக்கம்..

வி.1 : இந்தா இதுக்குள்ளெ இருக்குது தொழில் நுணுக்கம்...

வி.2 : அப்புறம்... அதுக்கான 'தில்லுமுல்லு'கள்..



வி.1 : என்னது... தில்லுமுல்லுகளா..?

வி.2 : தில்லுமுல்லு... தில்லுமுல்லு... வியாபாரம்தான் தில்லுமுல்லு...

வி.1 : சொல்லு சொல்லு... நல்லாச் சொல்லு... வியாபாரம் தான் தில்லுமுல்லு...

வி.2 : இரக்கம் இல்லே சொல்லு சொல்லு... இலாபம் தானே தில்லு முல்லு..

வி.1 : தில்லுமுல்லு தில்லுமுல்லு...
வியாபாரந்தான் தில்லுமுல்லு...
கிழக்கிந்தியக் கம்பெனிதான் ஜிஞ்சிச்சாம்!
'கிழக்கிந்தியக் கம்பெனிதான் ஜிஞ்சிச்சாம்- அது
கிழக்கு மேக்கா உள்ளெ வந்துச்சி ஜிஞ்சிச்சாம்
கிழக்கிந்தியக் கம்பெனிதான் ஜிஞ்சிச்சாம்-அதுக்குக்
கிரீடம் எடுத்துச் சூட்டி விட்டோம் ஜிஞ்சிச்சாம்!

வி.2 : 'வியாபாரம்தான் செய்ய வந்தோம் ஜிஞ்சிச்சாம்
விளைச்சலையே வாரிக்கிட்டோம் ஜிஞ்சிச்சாம்
சாட்டை கொண்டு பாட்டுப் பாடி ஜிஞ்சிச்சாம்
நாட்டை விண்டு வாயிலெ போட்டோம் ஜிஞ்சிச்சாம்

வி.1-வி.2 : ஜிஞ்சிச்சாம்... ஜிஞ்சிச்சாம்... ஜிஞ்சிச்சாம்... ஜிஞ்சிச்சாம்.. ஜிஞ்சிச்சாம்

வி.1 : வியாபாரி அதிகாரியா... அதிகாரி அரசாங்கமா மாறுனதுதான் நம்ம வரலாறு! அதுதான் நம்ம நாடகமாயணம்!

வி.2 : வியாபாரம்தான் நம்ம நாடகமாயணம்...

வி.1 : இனுமெ நம்ம நாடகந்தான் வியாபாரமாயணம்!..... வியாபாரமாயணம்...

வி.1-வி.2 : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

**வி.2** : உற்பத்திப் பொருளை நல்ல லாபத்தோட- உபரி வருமானத்தோட-சந்தைப்படுத்துறதுதான் வியாபாரம்.... ம்ம்ம்... சொல்லு...

**வி.1** : உபரி வருமானத்தோட சந்தைப்படுத்துறதுதான் வியாபாரம்...

**வி.2** : பணம், கொட்டோ கொட்டுன்னு கொட்டிகிட்டிருக்கணும்....பணம்...

**வி.1** : கொட்டோ கொட்டுன்னு கொட்டணும்...இரக்கம் வியாபாரத்துக்கு...

**வி.2** : எதிரி!...

**வி.1** : லாபம்தான்...

**வி.2** : உபரிதான்...

**வி.1** : வியாபாரத்துக்குச்...

**வி.2** : சபரி!

**வி.1** : வெரிகுட்... பொருளாதரத்துக்கு முட்டுக் கொடுக்கும் உள்நாட்டு மூலதனம்...

**வி.2** : அதன் முட்டியை முறிக்கும் பன்னாட்டு மூலதனம்...

**வி.1** : வாஸ்கோடகாமா வந்தவழி வியாபாரம்தான்... வியாபாரமாயணம்!

**வி.2** : கொலம்பஸோட சொந்தவழியும் வியாபாரம்தான்!... வியாபாரமாயணம்!

**வி.1** : ஒவ்வொண்ணும் ஒவ்வொரு அரசியல்...

**வி.2** : ஒவ்வொரு நிமிஷமும் காசு... வியாபாரமாயணம்!

**வி.1** : ஒவ்வொரு ஒறவும் காசு!...வியாபாரமாயணம்!

**வி.2** : லாபம்...லாபம்...

**வி.1** : லாபம்...லாபம்....

**வி.1** : அதுக்கான போட்டிபொறாமையிலெயிருந்து... வஞ்சகம் வெஞ்சினம்.... கொலை படுகொலையி



லெயிருந்து....கொத்துக் குண்டை வீசி எறியிற இனப்படுகொலை வரைக்கும்.... நீண்டுகிட்டுப் போறது... இந்த வியாபாரப் போட்டிதான்!....

**வி.1-வி.2** : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

**வி.1-வி.2** : வியாபாரமாயணம்.... வியாபாரமாயணம்... நல்லாப் பாராயணம் பண்ணுங்க...

**வி.2** : உணவு என்பது பண்பாடு....

**வி.1** : அதை உடைத்தெறியும் பன்னாடு...

**வி.1-வி.2** : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

**வி.2** : உடைகள் என்பதும் பண்பாடு...

**வி.1** : அதை உருக்குலைக்கும் பன்னாடு...

**வி.1-வி.2** : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்....

**வி.2** : கனவு என்பது பண்பாடு...

**வி.1** : அதைக் கலர்க் கலராக்கும் பன்னாடு...

**வி.1-வி.2** : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்...

**வி.2** : காதல் என்பது பண்பாடு...

**வி.1** : அதைக் கடைச் சரக்காக்கும் பன்னாடு....

**வி.1-வி.2** : வியாபாரமாயணம்... நல்லாப் பாராயணம் பண்ணி பழகுங்க...

**வி.1-வி.2** : வியாபாரமாயணம்... வியாபாரமாயணம். வியாபாரமாயணம்... வியாபாரமாயணம்

**வி.2** : ஆனா நாம இங்கே கலையை வியாபாரமா காட்டப் போறோம்?

**வி.1** : ம்ஹூம்... வியாபாரத்தைக் கலையாக் காட் போறோம்!

**வி.2** : அப்ப சரி!

**வி.1** : வியாபாரத்துக்கு மொதல்ல என்ன வேணும்?

வி.2 : மொதல்ல மொதல் வேணும்....

வி.1 : அப்புறம்... அதை வச்சிப் புதுசு புதுசாக் கண்டு புடிக்கனும்...

வி.2 : ம்ம்ம்- எது தேவைன்னு பாத்துப் புதுசு புதுசாக் கண்டுபுடிக்கனும் - அதுலதான் முதலீடு பண்ணனும்.

வி.1 : ஆனா...

வி.2 : காலம் முழுக்க அதுலயே கழிஞ்சுடக்கூடாது. அது ரொம்ப முக்கியம். ஆறுன இட்லியைச் சூடு பண்ணி சாப்பிடுறதில்லை... அதுமாதிரி...

வி.1 : பழசாயிருந்தாலும் அதுக்கும் புது லேபிள் கண்டுபுடிக்கனும்...

வி.2 : இல்லெ பழைய இட்லியைப் புது உப்புமாவா...

வி.1 : இல்லெ இட்லி ஃப்ரைன்னு...

வி.2 : ம்ம்ம்... இட்லி 65...

வி.1 : ம்ஹூம்... இட்லி 75...

வி.2 : இட்லி 85...

வி.1 : இட்லி 95ன்னு... மனம்போன போக்குலெ..

வி.2 : மாத்தி மாத்தி மார்க்கெட்ல நாமளே உட்டுகிட்டே யிருக்கனும். யோசிக்க உடக்கூடாது...

வி.1 : யோசிச்சிட்டா?

வி.2 : யோசிக்கவே உடக்கூடாது... கீரிக்கும் பாம்புக்கும் சண்டை உட்டுகிட்டேயிருக்கனும்... வெள்ளையும் சொள்ளையுமா வேடிக்கை பாத்துகிட்டே இருக்கும் போது வேட்டியவே அவுத்தாலும் அவனுக்கு ஒண்ணும் தெரியாது...

வி.1 : அப்பப் பாத்துக் கவனமாக் காச அள்ளனும்.



வி.2 : எரக்கம் வியாபாரத்துக்கு எறக்கங்கிறது மனசுலெ இருந்துகிட்டே இருக்கனும். அதுதான் வியாபாரம்!

வி.1 : இப்ப நம்ம வியாபாரத்துக்கு, இரக்கமேயில்லாம எதைப் புதுசாக் கண்டுபிடிக்கிறது?

வி.2 : மக்களுக்கு எது அதிகத் தேவைன்னு கண்டு புடிக்கனும்... அல்லது தேவைகளை நாமளே உருவாக்கனும்....

வி.1 : அதுக்கு, மொதல்ல பரப்பாய்வு நடத்தனும்...

வி.2 : உனக்கும் இப்பப்ப யோசனை தோன ஆரம்பிச்சிட்டு...

வி.1 : இந்தா இப்பவே பரப்பாய்வு....

நபர் 1 : விவசாயம் பொய்யாப் போச்சுங்க... அய்யா... மழையில்லை.. காத்துலெ பசையும் இல்லெ. அதனால விவசாயம் இல்லெ! கிராமத்ல தெனம் ரூ.26/- சம்பாதிச்சா, அவன் வறுமைக் கோட்டுக்குக் கீழெ இல்லெ, அதுக்கு மேலெ பணக்காரன்னு அரசாங்கம் சொல்றதுதாங்க எங்களுக்குக் கொஞ்சமும் புரியலெ...

நபர் 2 : விலைவாசி யானெ மாதிரி பெருத்துக்கிட்டே போகுது. அரிசி வெல ராக்கெட் வேகத்லெ பறந்து கிட்டேயிருக்கு...எப்படித்தான் மனுஷாளுங்க பொழைக்கிறதோ தெரியலெ...பேசாமெ கரி அடுப்பையே பத்த வச்சிக்கிட்டிருக்கலாம். கேஸைக் கண்ணுலெக் காமிச்சிட்டு அதைக் காத்தோட பறக்க விட்டுட்டா நாங்க எங்கதான் போறது?...

நபர் 3 : ஐ.டி. காரிடார் உள்ளெ நொழஞ்சாச்சி... இனுமெ வெவசாயம் அவுட். ரியல் எஸ்டேட்தான் டாப்!.. விவசாயங்றது வெறும் புனைவு! ரியல் எஸ்டேட்தான் ரியல். அதுலெதான் காசு... பட்டாவெ ஒங்க பேருக்கு மாத்திக் குடுக்க வி.ஏ.ஓ., தாசில்தாருக்குன்னு கொஞ்சம் தள்ள வேண்டியிருக்கும். ஃபைல் ஒரு மேஜைலயிருந்து அடுத்த மேஜைக்கு நகர்றதுக்கு ஒவ்வொரு மேஜைக்கும் பங்குப் பணம்

போயாகணும்... ஒங்களுக்குத் தெரியாததா... என்ன நான் சொல்றது?... சரி சரி.. ஹம்மர்தாங்க சம்மருக்குச் சூப்பர். காத்துலெ பறக்குற மாதிரியே இருக்கும்... ஆள் இருக்கு... வண்டியைக் கொண்டு வந்திடலாம்... இன்னொரு பெட்டி கூடுதலாத் தள்ள வேண்டியிருக்கும்... முக்கிய விஷயத்தைப் பேசும்போதுதான் இந்த எளவு போன் கட்டாகித் தொலைக்கும்... ஹலோ.. ஹலோ....

**வி.4** : அய்யா எனக்குப் பத்து ஏக்கரா நெலம் இருக்கு. ஆனா மழை இல்லெ... ஆத்துலெ தண்ணியும் இல்லெ... ம்ம்ம்ம்... பையங்க எல்லாம் பட்டணத்துலெ கூலி வேலெ பண்ணிப் பொழைக்கிறாங்க... நாங்க நெலத்தைக் கட்டிக்கிட்டு அழுதுக்கிட்டிருக்கோம்... அந்தச் சாமிதான் கண்ணெத் தொறக்கணும்....

**வி.1** : விவசாயம் கைவிட்டதுனாலெ... விவசாயிங்க மடியிராங்க... இதெவச்சி லாபம் சம்பாதிக்கிறதுதான் வியாபாரம்!.... நாம இந்த எடத்தத்தான் புடிக்கணும்.

**வி.2** : அப்ப... வியாபாரத்துக்கு விவசாயத்த நாம எடுத்துக்க வேண்டியதுதான்...

**வி.1** : விவசாயம்தான் இனி நம்ம வியாபாரம்!

**வி.2** : வியாபாரம்தான் இனி நம்ம விவசாயம்!

**வி.1-வி.2** : விவசாயமாயணம்.. வியாபாரமாயணம்...

**வி.2** : ஓம் வியாபார நமஹ!...

**வி.1** : ஓம் விவசாயம் நமஹ!...

**வி.2** : ஓம் வியாபாரமாயணம் நமஹ!.....

**வி.1** : ஓம் விவசாயமாயணம் நமஹ!...

**வி.2** : ஓம் நமோ வியாபார நமஹ!.....

**வி.1** : ஓம் நமோ விவசாயம் நமஹ!...

**வி.2** : ஓம் நமோ வியாபாரமாயணம் நமஹ!.....

**வி.1** : ஓம் நமோ விவசாயமாயணும் நமஹ!.....



**வி.2** : வியாபாரமாயணம்!

**வி.1** : விவசாயமாயணம்!

**வி.1** : மழை இல்லை... மானியம் இல்ல... மின்சாரம் இல்ல... இதுக்குள்ள. எப்படி விவசாயம் பண்ணுறது?

**வி.2** : விவசாயத்துக்கு மமாமி இல்லாட்டி என்ன!

**வி.1** : மமாமின்னா... எம்பிஏ க்குத் தமிழா?

**வி.2** : ம்ஹூம்... மழை... மானியம்...மின்சாரம்! அது இல்லாட்டி என்ன...

நெகிழி அரிசியை எறக்குவோம்...

**வி.1** : நெகிழி அரிசியா?

**வி.2** : இதுதான் நம்ம வியாபாரமாயணம்...நெகிழிதான் நம்ம வியாபார பாணம்!

**வி.1** : அதென்ன நெகிழி அரிசி?.... அதுக்கு மழையே வேண்டாமா?

**வி.2** : மழையும் வேண்டாம்... உரம்போட இலையும் வேண்டாம்...

**வி.1** : கேள்விப்பட்டதேயில்லையே!

**வி.2** : ஆனைக்கொம்பா, சீரகச் சம்பா ஆக்கிச் சாப்பிட்டக் காலம் ஒண்ணு இருந்துச்சா?

**வி.1** : ஆமா! வையக்கொண்டான் சாப்பிட்ட காலம் ஒண்ணும் இருந்துச்சி.

**வி.2** : ஐஆர் எட்டு சாப்பிட்டு ஏப்பம் விட்டதும் நடந்துச்சி!....

**வி.1** : அதிலே ஆப்பம் சுட்டதும் நடந்துச்சி!

**வி.2** : ஐ.ஆர். 8 வரிசையிலெ நாம எறக்குவோம் நெகிழி அரிசி!

**வி.1** : நெகிழி...நெகிழி...இதுவும் சொல்லிப் பாத்தா நல்லாதானிருக்கு... மாத்தத்தை ஏத்துக்க மனசுதான்